
Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.



ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 64 | உள்ளூர் - 05.03.2026 | வியாழன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 64 | வெளியூர் - 06.03.2026 | வெள்ளி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

சனியின் ஆசி பெற்றவர்கள் காணும் அறிகுறிகள்..!

மத்திய ஆயுத போலீஸ் படை 349 காலியிடங்கள்!

டாஸ்மாக் பணியாளர்களுக்கு ரூ.1000 சம்பள உயர்வு!

மலைப்பகுதிகளில் வீடா? புதிய விதிமுறைகள்!

## மத்திய அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு? அதுவும் மார்ச் மாசமே கிடைக்குதா?

புதுடெல்லி, மார்ச். 05–

வழக்கமாக மத்திய அரசு ஊழியர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு முறை அகவிலைப்படி உயர்வு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் நாட்டின் விலைவாசி நிலவரத்தை அடிப்படையாக கொண்டு நுகர்வோர் விலை குறியீட்டு தரவுகளை அடிப்படையாக கொண்டு மத்திய அரசு அடிப்படை சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை அகவிலைப்படியாக வழங்குகிறது. அரசு ஊழியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் சம்பளம் மாற்றியமைக்கப்படுகிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை அகவிலைப்படி உயர்வினை அரசு வழங்குகிறது. ஜனவரி மாதத்தில் ஒரு அகவிலைப்படி உயர்வு ஜூலை மாதத்தில் ஒரு அகவிலைப்படி உயர்வு அரசு ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டும். வழக்கமாக ஜனவரி மாதத்திற்கான அகவிலைப்படி உயர்வு அறிவிப்பை அரசு மத்திய அரசு ஹோலி பண்டிகை பரிசாக அறிவிக்கும். ஆனால் இந்த ஆண்டு ஹோலி பண்டிகை






முடிந்துவிட்டது இருந்தும் மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படவில்லை.

இதனால் ஒரு கோடிக்கும் அதிகமான அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் ஏமாற்றம் அடைந்திருக்கின்றனர். கேரளா, மத்தியபிரதேசம், மகாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்கள் அண்மையில் அகவிலைப்படியை உயர்த்திய நிலையில் மத்திய அரசும் அதே போல அறிவிக்கும் என எதிர்பார்க்கப்பட்டு அது நடக்கவில்லை. ஏற்கனவே எட்டாவது சம்பள கமிஷனே தாமதம் ஆகியிருக்கிறது தங்களுக்கு சம்பள உயர்வு இரண்டு ஆண்டுகள் தள்ளிப்போகிறது என கவலையில் இருக்கக்கூடிய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வாவது சரியான நேரத்தில் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இதுவரை அரசு அகவிலைப்படி உயர்வு குறித்த தகவலை வெளியிடவில்லை. கணக்கு போட்டு ட்டாங்க அக்கவுண்ட்டை தேடி வரும் பணம்!! தற்போது அரசு ஊழியர்களுக்கு 58% அகவிலைப்படி கிடைக்கிறது. அனைத்து இந்திய நுகர்வோர் விலை குறியீட்டை அடிப்படையாகக் கொண்டு தான் அகவிலைப்படி எவ்வளவு உயர்த்தி வழங்குவது என்ற முடிவு எடுக்கப்படும் டிசம்பர் மாதத்தில் இது 148.2 ஆகவும் ஜனவரியில் 148.6 ஆகவும் இருந்தது. இதன்படி கணக்கீடு செய்து பார்க்கும் போது இரண்டு சதவீதம் வரை அகவிலைப்படி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே மத்திய அரசு இம்மாத மத்தியிலேயே அகவிலைப்படி உயர்வு தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு வாய்ப்பு உள்ளதாக சொல்லப்படுகிறது. தற்போது 58 சதவீதமாக இருக்கக்கூடிய அகவிலைப்படி இரண்டு சதவீதம் உயர்த்தப்பட்டால் 60% ஆகும். அடிப்படை சம்பளம் 40,000 ரூபாயாக இருக்கக்கூடிய ஒரு நபருக்கு 24,000 ரூபாய் அகவிலைப்படியாக கிடைக்கும். அதுவும் ஜனவரி முதல் கணக்கிடப்பட்டு அரியர் தொகையும் கணக்கில் வரவு வைக்கப்படும். இதற்கிடையே 8ஆவது சம்பள கமிஷன் தனது பணிகளை தொடங்கியுள்ளது. பல்வேறு துறை அமைச்சகங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அரசு ஊழியர்களுக்கான யூனியன்களும் 3 என்ற ஃபிட்மண்ட் ஃபேக்டரை கொண்டு சம்பள உயர்வை கணக்கிட வேண்டும், குடும்ப அலகினை 3 என்பதில் இருந்து 5ஆக உயர்த்த வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துள்ளன.

## இந்தியாவுக்காக நாங்க இருக்கோம்.. கைகொடுக்கும் ரஷ்யா..!

ரஷ்யா, மார்ச். 05–

ஈரான் – அமெரிக்கா – இஸ்ரேல் மோதல் தீவிரமடைந்து வரும் நிலையில், ஹார்முஸ் ஜலசந்தி மீது ஈரான் முழு கட்டுப்பாட்டை ஏற்றுள்ளதாக அறிவித்துள்ளது. உலகின் 20 சதவீத எண்ணெய் மற்றும் எரிவாயு போக்குவரத்து இந்த பாதையில் ஏற்றுமதி நடைபெறுகிறது. இதனால் உலக எண்ணெய் சந்தையில் பெரும் அச்சம் நிலவுகிறது. இந்த சூழலில் இந்தியா மற்றும் சீனாவுக்கு எண்ணெய் விநியோகத்தை அதிகரிக்க தயாராக உள்ளதாக ரஷ்யா–வின் துணை



பிரதமர் அலெக்சாண்டர் நோவாக் புதன்கிழமை அறிவித்துள்ளார். இது இந்தியாவுக்கு பெரும் நிவாரணமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவுக்கு என்ன பாதிப்பு? இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் 88 சதவீதத்தை இறக்குமதி செய்கிறது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டால் எண்ணெய் விலை பயங்கரமாக உயரும். இது பணவீக்கத்தை தூண்டும். ஆனால் ரஷ்யா விநியோகத்தை அதிகரித்தால் இந்த அபாயம் குறையும். இந்திய அரசு பெட்ரோல்–டீசல் விலையை கட்டுப்படுத்த முயலும் வேளையில் ரஷ்யாவின் இந்த அறிவிப்பு மிகவும் முக்கியமானது, இதேபோல் அமெரிக்காவின் ரெசிப்ரோக்கல் வரி அச்சம் தற்போது இந்தியாவுக்கு இல்லை என்பதால் கூடுதல் நன்மை அளிக்கிறது. இந்தியாவில் 2022 ஏப்ரல் முதல் பெட்ரோல் – டீசல் விலை மாற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தேனாம்பேட்டை சைதாப்பேட்டை 4 வழித்தட சாலைப் பணியை ஆய்வு செய்தார் முதல்வர் ஸ்டாலின்...!

சென்னை, மார்ச். 05–

போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், சென்னையின் மைய பகுதியான சென்னை தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை நான்கு வழித்தட உயர்மட்டச் சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இதன் கட்டுமானப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு ஆய்வு செய்தார்.



## முதல்வர் பதவியில் இருந்து விலகுகிறார் நிதிஷ் குமார்? பீஹார் அரசியலில் பரபரப்பு!

புதுடில்லி, மார்ச். 05–

பீஹார் முதல்வர் பதவியில் இருந்து நிதிஷ்குமார் ராஜினாமா செய்துவிட்டு, ராஜ்யசபா தேர்தலில் போட்டியிட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

பீஹார் முதல்வரான நிதிஷ் குமார் 75 வயது ஆகிறது. வயது மூப்பு பிரச்னைகளில் அவதிப்பட்டு வருகிறார். இதனால், மகன் நிஷாந்த்தை அரசியலுக்குள் கொண்டு வந்து கட்சியில் முக்கிய பொறுப்பை வழங்க திட்ட மிட்டு வருகிறார். தனக்கு பின் கட்சியை வழிநடத்தும் பொறுப்பை மகனிடம் ஒப்படைக்கவும் அவர் திட்டமிட்டுள்ளதாக



தகவல் வெளியானது.

இந்நிலையில், ராஜ்யசபா தேர்தலில் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் கட்சி இரண்டு இடங்களில் வெற்றி பெறும் நிலையில் உள்ளது. அதில் ஒன்றில் ராம்நாத் தாக்கூர் என்பவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு உள்ளார். மற்றொரு இடத்துக்கான வேட்பாளர் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், நிதிஷ் குமார் முதல்வர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, ராஜ்யசபாவுக்கு போட்டியிடலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கான வேட்பு மனு தயாராகிவிட்டதாகவும், நிதிஷ் குமார் கையெழுத்து போட வேண்டியது தான் பாக்கி எனவும் தெரிகிறது.

இதனிடையே ஜஜதவின் செயல் தலைவர் சஞ்சய் ஜா, நிதிஷ்குமாருடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார். இதனால், நிதிஷ்குமார் பதவி விலகல் குறித்த யூகங்கள் கிளம்பி உள்ளன. அக்கட்சியை சேர்ந்த மத்திய அமைச்சர் லாலன் சிங் நாளை டில்லியில் இருந்து பாட்னாவுக்கு வர உள்ளார். இதுவும் நிதிஷ்குமாரின் பதவி விலகலுக்கான விவாதத்தை அங்கு கிளப்பி உள்ளது.

### பாஜ முதல்வர்?

இதனிடையே, பீஹார் முதல்வர் பதவியில் இருந்து நிதிஷ்குமார் விலகினால், அடுத்ததாக பாஜவை சேர்ந்தவர் முதல்வராக பதவியேற்கலாம் என கூறப்படுகிறது. நிதிஷ்குமார் மகன் நிஷாந்த்க்கு துணை முதல்வர் பதவி வழங்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தனியார் பள்ளியில்

# அரசியல், மதம் சார்ந்த நிகழ்ச்சிகள் நடத்த தடை!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!!

சென்னை, மார்ச். 05–

தனியார் பள்ளிகளில் அரசியல் மற்றும் மதம் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் பிரிவினையை தூண்டும் நிகழ்வுகளை நடத்த தடை விதித்து தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில், மத நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதுபோல இந்துக்கள், இந்து அமைப்புகள் நடத்தும் பள்ளிகளில் இந்து மாத சார்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கு ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், தனியார் பள்ளிகளில் அரசியல் மற்றும் மதம் சார்ந்த நிகழ்வுகள் நடத்த தடை விதித்து தமிழ்நாடு அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சட்ட விதிகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் செயல்படும் மெட்ரிகுலேஷன், சிபிஎஸ்இ உள்ளிட்ட அனைத்து தனியார் பள்ளிகளும் அனுமதி பெற்று செயல்பட வேண்டும். இதற்காக தமிழ்நாடு அரசு தனியாக சட்டம் இயற்றி தனியார் பள்ளிகளுக்கான சட்டம் மற்றும் விதிகளை ஏற்கனவே வரையறை செய்து உள்ளது.

இந்த நிலையில் தனியார் பள்ளிகளில் சாதி, மதம் சார்ந்த நிகழ்வுகள் நடைபெறுவதால் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. இதனை முற்றிலும் தடை செய்வதற்காக தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சட்ட விதிகளில் திருத்தங்களை செய்துள்ளது.




பள்ளி கல்வித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தரமோகன் வெளியிட்டுள்ள உத்தரவில், “தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் மேற்கொண்டு தமிழ்நாடு அரசு அரசாணையாக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) சட்டம், 2018 (தமிழ்நாடு சட்டம் 35/2019) பிரிவு 57 ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாடு ஆளுநர் இதன் மூலம் தமிழ்நாட்டில் பின்வரும் திருத்தங்களைச் செய்துள்ளார்.

தமிழ்நாட்டில் செயல்படும் தனியார் பள்ளிகளுக்கான அங்கீகாரம் பெறுவதற்குரிய கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. எந்தவொரு பள்ளி வளாகமும், பள்ளி நேரத்திலோ அல்லது அதன் பின்னரோ, எந்தவொரு நிகழ்ச்சி, கூட்டம், பிரச்சாரம், அறிவுறுத்தல் அல்லது எந்தவொரு வெளிப்புற நபர், சங்கம் அல்லது அமைப்பின் எந்தவொரு செயல்பாட்டையும் ஏற்பாடு செய்ய, நடத்த அல்லது எளிதாக்க பயன்படுத்தப்படக்கூடாது.

(i) அரசியல் அல்லது கருத்தியல்

(ii) வகுப்புவாத அல்லது பிரிவினைவாத, அல்லது

(iii) இல்லையெனில், பள்ளியின் கல்வி நோக்கங்களுடன் தொடர்பில்லாதது, கலாச்சார நிகழ்வுகள், சமூக சேவைத் திட்டங்கள், ரத்த தான முகாம்கள், நினைவு விழாக்கள் அல்லது இது போன்ற செயல்பாடுகள், அவை மதச்சார்பற்றவை, அரசியல் சாராதவை, கல்வி நிறுவனத்தின் நேரடி மேற்பார்வை மற்றும் பொறுப்பின் கீழ் நடத்தப்பட்டால் மட்டுமே அனுமதிக்கப்படும்.

மேலும் அரசாங்கத்தால் குறிப்பிடப்படும் தகுதி வாய்ந்த அதிகாரி அல்லது வேறு எந்த அதிகாரத்தின் முன் அனுமதி பெற வேண்டும். இந்த துணை விதியின் நோக்கங்களுக்காக, “வகுப்புவாத அல்லது பிளவுபடுத்தும் செயல்பாடு என்பது மதம், இனம், சாதி, சமூகம், மொழி அல்லது சித்தாந்தத்தின் அடிப்படையில் மாணவர்களிடையே ஒற்றுமையின்மை, பகைமை, வெறுப்பு அல்லது வெறுப்பை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்ட அல்லது சாத்தியமான எந்தவொரு செயலையும் குறிக்கிறது” என குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு சிறுபான்மையினர் நடத்தும் தனியார் பள்ளிகளுக்கும் பொருந்துமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப் பிரிவின் சார்பில் நான்காம் கட்டமாக புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 500 ஆன்மிக நூல்களை வெளியிட்டார். இந்திகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாடி தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்புரீதர். கூடுதல் ஆணையர்கள் துரை. இரவிச்சந்திரன் சி.ஹரிப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நினைவில் வாழும் தமிழறிஞர் ஈரோடு தமிழன்பன் (ந. ஜெகதீசன்) நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கம் செய்யப்பட்டு அவரின் வாழ்க்கைத் துணையான தி.பா.சாந்தகுமாரிக்கு நூலுரிமைத்தொகை 10 இலட்சமும், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் எழுத்தாளர் தாயம்மாளுக்கு அறவாணனுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் குடியிருப்புக்கான ஆவணங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 05.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 21 -ம் தேதி

# வெள்ளியின் அடுத்த ஸ்டாப் ரூ.1.5 லட்சம் தான்! கணிப்புகள் பொய்த்தது!




வெள்ளி விலையானது 5 லட்சம் ரூபாய் என்ற மெகா இலக்கை தொடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது தரை இறங்க தொடங்கியிருப்பது முதலீட்டாளர்க ளை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. அதுவும் ஈரான் – இஸ்ரேல், அமெரிக்கா இடையில் நிலவி வரும் பதற்றமான சூழலுக்கு சரிவது ஏன் என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

கடந்த சில மாதங்களாகவே வெள்ளி விலை கிலோவுக்கு 5 லட்சத்தை எட்டும் என்ற யூகமானது சமூக வலைத்தளங்களில் பரவலாக பேசப்பட்டு வந்தது. கமாடிட்டி நிபுணர்களும் தொடர்ந்து வெள்ளி விலையானது அதிகரிக்கலாம் என்று கூறி வந்தனர். ஆனால் தற்போதைய சந்தை நிலவரம் முற்றிலும் வேறொரு திசையில் பயணித்து கொண்டிருக்கிறது. உச்சத்தில் இருந்த வெள்ளி விலை, இப்போது சரிவை சந்தித்து கொண்டுள்ளது. வானத்தைத் தொடும் என எதிர்பார்க்கப்பட்ட வெள்ளியின் விலை, இப்போது தரையிறங்க தொடங்கியிருப்பது முதலீட்டாள ர்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த சில மாதங்களாகவே வெள்ளி விலை கிலோவுக்கு 5 லட்சத்தை எட்டும் என சமூக வலைதளங்களில் பரவி வந்த யூகங்கள் மத்தியில், சில கமாடிட்டி நிபுணர்களும் விலை தொடர்ந்து உயர வாய்ப்புள்ளதாக கூறி வந்தனர். ஆனால் தற்போதைய சூழலில் வெள்ளியானது அப்படியே தலைகீழாக மாறியுள்ளது. உச்சத்தில் இருந்த வெள்ளி விலை, இப்போது சரிவை சந்தித்து வருகிறது. ஏற்கனவே உச்சத்தில் இருந்து 47% சரிவை சந்தித்துள்ள நிலையில், தற்போது முக்கியமானதொரு கட்டத்தை அடைந்துள்ளது. டெக்னிக்கலாக பார்க்கும்போது ஆர்.எஸ்.ஐ மற்றும் பிபோனாச்சி லெவல்கள் தற்போது வெள்ளிக்கு எதிராக காணப்படுகிறது. இதன் காரணமாக வெள்ளியின் அடுத்த இலக்கு 50 டாலர் அல்லது 1,5 லட்சம் ரூபாயாக இருக்கும் என கூறியுள்ளனர்.

வெள்ளி விலையானது காமெக்ஸ் சந்தையில் அதன் வரலாற்று உச்ச விலையான 121 டாலரில் இருந்து கிட்டத்த ட்ட 47% சரிவைக் கண்டு, 64 டாலராக காணப்படுகிறது. இதே எம்சிஎக்ஸ் சந்தையில் கிலோவுக்கு 4,20,000 ரூபாயில் இருந்து 2,34,000 ரூபாயாக சரிவை கண்டுள்ளது. இதுவும் சுமார் 44% சரிவாகும். தற்போது ஈரான் – இஸ்ரேல் இடையிலான போர் மத்தியில், தங்கமானது பாதுகாப்பு புகலிடமாக ஜொலிக்க தொடங்கியுள்ளது. ஆனால் வெள்ளி தற்போதைக்கு அதன் ஏற்றத்தை குறைத்துள்ளது. அதன் அடுத்த ஸ்டாப் 50 டாலராக இருக்கும்.

கடந்த கால வரலாற்றை பார்க்கும்போது கடந்த 1980 ல் வெள்ளி விலை மிகப்பெரிய உச்சத்தை எட்டியது. ஆனால் அந்த உச்சத்தில் இருந்து யாரும் எதிர்பாராத விதமாக அதன் விலையில் 72% சரிவை கண்டது. அதன் காரணமாக உச்சத்தில் வாங்கிய முதலீட்டாளர்கள் பெரிய அளவில் நஷ்டத்தை கண்டனர். அதே வரலாற்றுடன் தற்போதைய சூழலை ஒப்பிடும்போது, அதே 72% சரிவை காணலாம் என கணக்கிட்டால், வெள்ளி விலை 35 டாலர் வரை அதல பாதாளத்திற்கு செல்ல வாய்ப்புண்டு. ஆக தற்போது இந்திய சந்தையில் 5 லட்சம் என்ற இலக்கை எட்ட சாத்தியமில்லை. 35 டாலர் என்பது அவ்வளவு சீக்கிரம் எட்டி விடும் என கூற முடியாது. ஆனால் வெள்ளி விலை இறக்க தொடங்கினால், அது முரட்டுத்தனமாக இருக்கும்.


மாத சார்ட் பேட்டர்னில் பார்க்கும்போது ஆர்.எஸ்.ஐ 121 டாலர் என்ற உச்சத்தை எட்டிய பிறகு, சற்று கீழாக நகரத் தொடங்கியுள்ளது. இது வெள்ளியானது உச்சத்தில் இருந்து சற்று பலவீனமாக இருப்பதை காட்டுகிறது. ஒரு கார் மலை உச்சத்திற்கு திக்கி திணறி ஏற்றம் கண்டு, அங்கிருந்து கீழாக சரிந்தால் எப்படி இருக்குமோ, அதே நிலையில் தான் வெள்ளியும் இருக்கிறது. இதுவரை காளையின் பிடியில் சிக்கியிருந்த வெள்ளி விலையானது, தற்போது கரடிகளின் ஆதிக்கத்திற்கு மாறத் தொடங்கியுள்ளதை இது உறுதிப்படுத்துகிறது. பொதுவாக மாதாந்திர சார்ட்டில் ஏற்படும் மாற்றங்கள் சில வாரங்களில் சரியாகிவி டாது. இது பல மாதங்கள் அல்லது வருடங்கள் நீடிக்கக்கூடிய ஒரு மந்தநிலையின் ஆரம்பமாக இருக்கலாம். ஆர்எஸ்ஐ குறைவது என்பது வாங்குபவர்களின் பலம் குறைந்து, விற்பவர்கள் கை ஓங்குவதை காட்டுகிறது. சர்வதேச சந்தையில் டாலர் மதிப்பு வலுவடைந்ததால், தங்கம் மற்றும் வெள்ளி போன்ற உலோகங்களின் மீதான முதலீடு குறைந்து வருகிறது. மேற்கொண்டு வெள்ளியின் தொழில்துறை தேவை, சோலார் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் துறையில் பயன்பாடு சற்று குறைந்திருப்பதும் ஒரு முக்கிய காரணமாகவும் பார்க்கப்படுகிறது. ஆக முந்தைய கற்பனை செய்யப்பட்ட 5 லட்சத்தை விட, யதார்த்தமான 1.5 லட்சம் என்பதே இப்போதைக்கு வெள்ளியின் நிலையான இலக்காக இருக்கும் என கூறப்படுகிறது.

# திமுக கூட்டணியில் 28 தொகுதிகள் ஒதுக்கீடு: காங்கிரஸ் கட்சிக்கு மீண்டும் பழைய தொகுதிகள் கிடைக்குமா?

சென்னை, மார்ச். 05–

ஒரு வழியாக, 3 மாத போராட்டத்திற்கு பிறகு, தொடர்ந்து 5–வது முறையாக திமுக – காங்கிரஸ் கூட்டணி உறுதியாகி உள்ளது. இந்த முறை காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த தேர்தலைவிட 3 தொகுதிகள் அதிகம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021–ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் கட்சி, பொன்னேரி, ஸ்ரீபெரும்புதூர்(தனி), சோளிங்கர், ஊத்தங்கரை (தனி), ஓமலூர், உதகமண்டலம், கோவை (தெற்கு), காரைக்குடி, மேலூர், சிவகாசி, ஸ்ரீவைகுண்டம், குளச்சல், விளவங்கோடு, கிள்ளியூர், ஈரோடு கிழக்கு, தென்காசி, நாங்குநேரி, அறந்தாங்கி, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, ஸ்ரீவில்லிப்புத்தூர், திருவாடானை, உடுமலைப்பேட்டை, மயிலாடுதுறை, வேளச்சேரி ஆகிய 25 தொகுதிகளில் களம் கண்டது. இந்த முறையும் அதே 25 தொகுதிகளை உள்ளடக்கி 28 தொகுதிகளை திமுக தலைமை வழங்கும் என்று காங்கிரஸ் கட்சி எதிர்பார்க்கிறது. ஆனால், திமுக தலைமையோ, கடந்த முறை வழங்கிய தொகுதி



களை அப்படியே வழங்க முடியாது, குறிப்பாக காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் வெற்றி பெற்ற தொகுதிகளைக்கூட திமுக எடுத்துக்கொண்டு வேறு தொகுதி வழங்குவோம் என்று கூறியுள்ளதாம்.

எடுத்துக்காட்டாக, கடந்த முறை தென்சென்னையில் உள்ள வேளச்சேரி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் அசன் மவுலானா வெற்றிபெற்று எம்.எல்.ஏ.வாக உள்ளார். இந்த முறை அந்த தொகுதியில் நாங்கள் வேட்பாளரை களம் இறக்க உள்ளோம் என்று திமுக தலைமை கூறிவிட்டதாம். அதற்கு பதிலாக, வட சென்னையில் ஒரு தொகுதியை தருவதாகவும் உத்தரவாதம் அளித்துள்ள தாம். இப்படி, திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு தொகுதி ஒதுக்கீட்டில் மாற்றம் ஏற்படும் என்ற நிலையில், வேட்பாளர் தேர்விலும் காங்கிரஸ் கட்சி அதிரடி காட்ட இருக்கிறதாம்.

கடந்த முறை காங்கிரஸ் சார்பில் களம் கண்டு வெற்றி பெற்ற 18 எம்.எல்.ஏ.க்களின் 5 ஆண்டு கால செயல்பாடு எப்படி? என்பதை ஆராய்ந்தே காங்கிரஸ் தலைமை மீண்டும் வாய்ப்பு வழங்கலாமா?, வேண்டாமா? என்று முடிவு செய்ய இருக்கிறதாம்.

பிரின்ஸ், பழனி நாடார் போன்றோருக்கு இந்த முறை வாய்ப்பு மறுக்கப்படும் என்று கூறப்படுகிறது. புதிதாக பலருக்கு வாய்ப்பு வழங்கப்பட உள்ளதால், தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையகமான சத்தியமூர்த்தி பவன் களை கட்ட தொடங்கியுள்ளது.

# சென்னை மெட்ரோ பயணிகளின் வசதிக்காக 5 நிமிடத்திற்கு ஒரு பேருந்து! தமிழ்நாடு அரசு!



சென்னை, மார்ச். 05–

சென்னை மெட்ரோ பயணிகளுக்காக 11 முக்கிய நிலையங்களில் 220 மினி மற்றும் மைக்ரோ பேருந்துகள் மூலம் 5 நிமிட இடைவெளியில் ‘கடைசி மைல் இணைப்பு’ சேவை வழங்க தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

# பராமரிப்புப் பணி: ரயில் சேவையில் மாற்றம்: பயண நேரங்கள் அதிகரிப்பு! தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, மார்ச். 05–

சென்னையில் நடைபெறும் ரயில் பாதை பராமரிப்புப் பணிகள் காரணமாக, மார்ச் மாதத்தில் தமிழகம் வழியாக இயங்கும் பல்வேறு முக்கிய விரைவு ரயில்களின் பயண நேரங்களில் 15 நிமிடங்கள் முதல் 3 மணி நேரம் வரை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள அறிவிப்பில், சென்னையில் ரயில் பாதையின் ஒரு பகுதியை மூடி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு உள்ளதால், மார்ச் மாதத்தில் பல்வேறு முக்கிய ரயில்களின் பயண நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. இதன் காரணமாக, குறிப்பிட்ட தேதிகளில் இயக்கப்படும் ரயில்கள் வழக்கமான நேரத்தை விட தாமதமாக சென்றடையும்.

இதன்படி, மார்ச் 12–ம் தேதி மதியம் 2 மணிக்கு புறப்படும் பாட்னா எர்ணாகுளம் சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 22644) 50 நிமிடங்களும், மார்ச் 13–ம் தேதி மதியம் 3.50–க்கு புறப்படும் நரசாபூர் SMVT பெங்களூரு எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 07153) 45 நிமிடங்களும் தாமதமாக இயங்கும். மார்ச் 11 அன்று இரவு 7.35 மணிக்கு புறப்படும் திப்ருகார் கன்னியாகுமரி விவேக் எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 22504) 40 நிமிடங்கள் தாமதமாகும்.

குறிப்பாக, மார்ச் 28–ம் தேதி புறப்படும் லால் குவான் KSR பெங்களூரு பூஜா ஸ்பெஷல் (வண்டி எண்: 05074) 3 மணி நேரம் 20 நிமிடங்களும், அதே நாளில் புறப்படும் தானாப்பூர் SMVT பெங்களூரு சங்கமித்ரா சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 12296) 2 மணி நேரம் 10 நிமிடங்களும் காலதாமதமாக இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹவுரா சென்னை சென்ட்ரல் மெயில் (வண்டி எண்: 12839) மார்ச் 4 மற்றும் 5–ம் தேதிகளில் 1 மணி நேரம் 5 நிமிடங்களும், மார்ச் 7–ம் தேதி 1 மணி நேரம் 15 நிமிடங்களும் தாமதமாக வந்து சேரும். மேலும், மார்ச் 5–ம் தேதி புறப்படும் பாட்னா எர்ணாகுளம் சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் 60 நிமிடங்களும், மார்ச் 5 மற்றும் 7–ம் தேதிகளில் புறப்படும் புதுடெல்லி சென்னை சென்ட்ரல் கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 12616) 15 நிமிடங்களும் காலதாமதமாகும். மார்ச் 6–ம் தேதி புறப்படும் நியூ தின்சுகியா எஸ்.எம்.வி.டி பெங்களூரு சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 22502) 60 நிமிடங்கள் தாமதமாக



இயங்கும். தமிழகத்திற்குள் இயங்கும் ரயில்களைப் பொறுத்தவரை, மார்ச் 26–ம் தேதி சென்னை எக்மோர் மதுரை வைகை சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 12635) 60 நிமிடங்களும், மார்ச் 28–ம் தேதி 1 மணி நேரம் 10 நிமிடங்களும் தாமதமாகப் புறப்படும். புதுச்சேரி காக்கிநாடா போர்ட் எக்ஸ்பிரஸ் (வண்டி எண்: 17656) மார்ச் 26 மற்றும் 28–ம் தேதிகளில் 30 நிமிடங்கள் தாமதமாகும்.

இதுதவிர, இந்தூர் திருவனந்தபுரம் வடக்கு எக்ஸ்பிரஸ் (மார்ச் 9) 50 நிமிடங்களும், தன்பாத் ஆலப்புழா எக்ஸ்பிரஸ் (மார்ச் 7 மற்றும் 14) 35 நிமிடங்களும், SMVT பெங்களூரு திருவனந்தபுரம் வடக்கு ஸ்பெஷல் (மார்ச் 18) 1 மணி நேரம் 15 நிமிடங்களும், KSR பெங்களூரு கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் (மார்ச் 25) 30 நிமிடங்களும் தாமதமாக இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் வேதாந்த ஜேஇஇ மெயின் வெற்றி: 345 மாணவர்கள் 90%க்கு மேல் மதிப்பெண் சாதனை!




திருச்சி, மார்ச். 05–

வேதாந்த மாணவர்கள் இந்த ஆண்டு தேர்வில் தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். மொத்தம் 345 மாணவர்கள் 90%க்கு மேல் மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளனர். மாநிலத்தின் தலைசிறந்த சாதனையாளர்களில் பரமேஸ்வர் M 99.92% பெற்று முன்னிலை வகித்தார்; அவரைத் தொடர்ந்து வருண் ஆதித்யா S 99.77% மற்றும் பூமிகா சர்மா 99.75% பெற்று அதிக மதிப்பெண் பட்டியலில் இடம்பிடித்தது.

மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 Vedantu மாணவர்கள் 99.5%க்கு மேல் மதிப்பெண் பெற்றுள்ளதுடன், 26 மாணவர்கள் 99%க்கு மேல் மதிப்பெண் பெற்று உயர்ந்த சாதனை புரிந்துள்ளனர். இவ்வாறு மாநிலம் முழுவதும் மாணவர்கள் தொடர்ந்து சிறந்த கல்வித் திறனை வெளிப்படுத்தி வருகின்றனர். தமிழ்நாடு முழுவதும் 20 Learning Centres–ஐ இயக்கும் Vedantu, தனது இரண்டாவது முழுமையான கல்வியாண்டில் முன்னேற்றப் பாதையில் உள்ளது. Ved AI எனும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் தனிப்பட்ட கற்றல் அமைப்பு, Smart Clickers மற்றும் 24×7 Insta Solve போன்ற வசதிகள் மூலம் மாணவர்களின் கற்றலை தனிப்பயனாக்கு, உடனடி மதிப்பீடு மற்றும் வழிகாட்டுதலை வழங்கி கல்வித் தரத்தை உயர்த்தி வருகிறது.

# டிஸ்னி அட்வென்சர் கப்பல் சிங்கப்பூர் வருகை; ஆசியாவில் முதல் தாயக துறைமுகமாக டிஸ்னி குரூஸ் லைன் அறிமுகம்!

சென்னை , மார்ச். 05–

சிங்கப்பூரை தாயக துறைமுகமாக கொண்டு இயங்கவுள்ள டிஸ்னி அட்வென்சர் கப்பல் வருகை, ஆசியாவில் டிஸ்னி குரூஸ் லைன் நிறுவனத்தின் முதல் நிரந்தர க்ரூஸ் சேவையாக ஒரு முக்கிய மைல் கல்லாக அமைந்துள்ளது. சிங்கப்பூர் மெரினா பே குரூஸ் மையம் சிங்கப்பூர் துறைமுகத்தை நோக்கி கப்பல் நெருங்கியபோது நீர்வீழ்ச்சி வரவேற்பும், மாலை நேர பட்டாசு காட்சிகள் நிகழ்ந்து உற்சாகமான வரவேற்பு வழங்கப்பட்டது. இந்த கப்பல் மார்ச் 10, 2026 முதல் சிங்கப்பூரிலிருந்து மூன்று மற்றும் நான்கு இரவுகள் கொண்ட கடல் பயணங்கள் தொடங்குகிறது. ஜோ ஷாட், டிஸ்னி சிக்னேச்சர் அனுபவங்கள் நிறுவனத்தின் தலைவர் கூறுகையில், “டிஸ்னி அட்வென்சர் கப்பல் சிங்கப்பூர் தாயக துறைமுகம் வருகை தந்தது எங்கள் உலகளாவிய விரிவாக்கத்தில் முக்கியமான படியாகும். இதன் மூலம் ஆசியாவில் முதல் முறையாக டிஸ்னி க்ரூஸ் அனுபவத்தை அறிமுகப்படுத்துகிறோம். தனித்துவமான கதையாடலும் படைப்பாற்றலும் இணைந்த அனுபவங்களை புதிய இலக்கில் பயணிகளுக்கு வழங்கும்,” என்றார். மெலிசா ஓவ், சிங்கப்பூர் சுற்றுலா வாரியம் தலைமை நிர்வாக அதிகாரி கூறுகையில், “டிஸ்னி குரூஸ் லைன் தனது புதிய கப்பலை சிங்கப்பூரில் தாயக துறைமுகமாக அமைத்தது, முன்னணி க்ரூஸ் இலக்காக எங்களின் நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்துகிறது. டிஸ்னி அட்வென்சர் வழங்கும் பொழுதுபோக்கு மையப்படுத்தப்பட்ட கடல் விடுமுறை அனுபவங்கள், சிங்கப்பூர் பல்வேறு சுற்றுலா அனுபவங்களுடன் சிறந்த இணைப்பாக இருக்கும்,” என்றார்.

# மணிப்பால் ஃபின்டெக் சேலத்தில் புதிய கிளை தொடக்கம்; தமிழ்நாட்டில் நம்பகமான நிதி சேவைகள் விரிவாக்கம்!


சேலம் , மார்ச். 05–

மணிப்பால் ஃபின்டெக், நிறுவனத்தின் நம்பிக்கைக்குரிய பாரம்பரிய ஆதரவுடன், பிப்ரவரி 27 அன்று Salem நகரில் தனது புதிய கிளை அலுவலகத்தைத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான சேலத்தில் இந்த தொடக்கம், தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்ட, வெளிப்படையான மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தப்பட்ட நிதி சேவைகளை விரிவுபடுத்தும் முக்கிய முன்னேற்றமாக அமைந்துள்ளது.




புதிய கிளை அலுவலகம் டிஜிட்டல் செயல்திறன் மற்றும் நேரடி சேவை அனுபவத்தை ஒருங்கிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் தங்கக் கடன் மற்றும் தங்கமற்ற கடன் உள்ளிட்ட சேவைகள் விரைவாகவும், பாதுகாப்பாகவும், எளிமையாகவும் பெறலாம். நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன், பயிற்சி பெற்ற நிதி நிபுணர்கள் தங்க மதிப்பீட்டில் இருந்து உடனடி பண வழங்கல் வரை ஒவ்வொரு கட்டத்திலும் வழிகாட்டுகின்றனர்.

நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பூஜா சிங் தெரிவித்ததாவது, டிஜிட்டல் வசதியையும் மனித தொடர்பையும் இணைத்து நம்பகமான மற்றும் வெளிப்படையான நிதி தீர்வுகளை வழங்கும் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். பெங்களூருவில் தொடங்கிய முதல் கிளையின் வெற்றியைத் தொடர்ந்து, சேலம் கிளை தமிழ்நாட்டில் விரிவாக்கத்தின் அடுத்த கட்டமாகும்; மேலும் பல நகரங்களில் புதிய கிளைகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.



# சனியின் ஆசி பெற்றவர்கள் காணும் அறிகுறிகள் இவை..!



ஜோதிடத்தின்படி, 9 கிரகங்களில் சனி மிகவும் மெதுவாக நகரும் கிரகம். சனியை நீதிபதி என்றும் அழைக்கிறார்கள். நாம் செய்த நல்ல மற்றும் கெட்ட கர்மாவுக்கு ஏற்ப பலன்களைத் தருவதாக நம்பப்படுகிறது. அதனால்தான் சனியின் பெயரைக் கேட்டாலே பலர் பயப்படுவார்கள். சனியின் செல்வாக்கு ஒருவரின் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று ஜோதிடர்கள் கூறுகிறார்கள்.

இருப்பினும், சனி எப்போதும் நமக்கு கஷ்டங்களை மட்டுமே தருகிறது என்று அர்த்தமல்ல. நமது கர்மா சனியின் ஆசிகளால் பாதிக்கப்படுகிறது, அதாவது நாம் நல்ல கர்மா செய்தால், பிரச்சனைகளைக் குறைத்தல் மற்றும் அதிர்ஷ்டத்தை அதிகரிப்பது போன்ற நல்ல பலன்களைக் காண்போம். சில ராசிகள் மூலம் நமக்கு சனியின் ஆசி இருக்கிறதா என்பதை அறிய முடியும் என்று ஜோதிடம் கூறுகிறது.

ஜோதிட நம்பிக்கைகளின்படி, வீட்டை விட்டு வெளியேறும்போது ஒரு கருப்பு நாயைப் பார்ப்பது ஒரு நல்ல அறிகுறியாகக் கருதப்படுகிறது. குறிப்பாக கருப்பு நாய் பால் குடித்தால் அல்லது அமைதியாகத் தோன்றினால், அது சனியின் ஆசியின் அறிகுறியாகக் கருதப்படுகிறது. இதன் பொருள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். வேலை, வணிகம் அல்லது குடும்ப விஷயங்களில் தடைகள் நீங்கும் என்பதற்கான அறிகுறியாகக் கருதப்படுகிறது. அதனால்தான் சனிக்கிழமை கருப்பு நாய்களுக்கு உணவளிப்பது நல்லது என்றும் சிலர் நம்புகிறார்கள்.

மேலும், பிச்சைக்காரர்களைப் பார்ப்பது ஜோதிடத்தில் ஒரு சிறப்பு அடையாளமாகக் கருதப்படுகிறது. ஒரு பிச்சைக்காரன் எங்கேயாவது சாப்பிடுவதைப் பார்த்தாலோ அல்லது அவனுக்கு உணவளித்தாலோ, அது சனியின் ஆசியைப் பெறப் போகிறீர்கள் என்பதற்கான அறிகுறியாகும். இது நிதி நிலைமையை மேம்படுத்துதல், வருமானத்தை அதிகரித்தல் மற்றும் கடன்களைக் குறைத்தல் போன்ற நல்ல விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்று கூறப்படுகிறது. ஏழைகளுக்கு தானம் செய்து உதவுவது சனியின் செல்வாக்கைக் குறைக்கும் என்றும் ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

கருப்பு பசுவைப் பார்ப்பதும் ஒரு நல்ல அறிகுறியாகக் கருதப்படுகிறது. நீங்கள் எங்கும் ஒரு கருப்பு பசுவைப் பார்த்தாலோ அல்லது அது பால் கொடுப்பதைப் பார்த்தாலோ, அது சனியின் ஆசியின் அடையாளமாகக் கருதப்படுகிறது. இது செழிப்பு, நிதி முன்னேற்றம் மற்றும் குடும்பத்தில் மகிழ்ச்சியின் அடையாளமாகக் கருதப்படுகிறது. சனிக்கிழமைகளில் பசுக்களுக்கு புல் அல்லது உணவை ஊட்டுவதன் மூலம், சனியின் ஆசியைப் பெறலாம் என்று சிலர் நம்புகிறார்கள்.

## சினிமா துளிகள்..!

# ‘சிக்ஸ் பேக்’ முயற்சி பண்ணாதீங்க... இளைஞர்களுக்கு, பரத் அறிவுரை!



சிக்ஸ் பேக் என்பது விபரீதமான முயற்சி தான். இதை பலமுறை நான் வலியுறுத்தி பேசியுள்ளேன். இதை தயவுசெய்து யாரும் முயற்சி பண்ணாதீங்க... இதில் உடல் கடுமையாக பாதிப்படையும்.

முன்னணி நடிகரான பரத், ‘555’ படத்துக்காக கடும் உடற்பயிற்சி மூலம் சிக்ஸ் பேக் உடற்கட்டுக்கு மாறினார். இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் சிக்ஸ் பேக் முயற்சியை யாரும் செய்யவேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளார்.

பரத் கூறும்போது, ‘சிக்ஸ் பேக்’ வைக்க நிறைய தியாகம் செய்யவேண்டும். நமது வாழ்க்கை முறையையே மாற்றிக்கொள்ள வேண்டும். எளிதாக சொல்லிவிடலாம். ஆனால் சிக்ஸ் பேக் வைக்க மெனக்கெட வேண்டும்.

நிச்சயம் நான் ‘சிக்ஸ் பேக்’ வைத்தாக வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால், ஒருதடவை முயற்சி செய்து, அதை நடத்திக்காட்டி விட்டு, அத்துடன் அதை விட்டுவிடுங்கள். அதை தொடரவேண்டும் என்று நினைக்காதீர்கள். அது உடலுக்கு நல்லது கிடையாது. ‘555’ படத்துக்காக கிட்டத்தட்ட ஒன்றரை வருடம் கோழிக்கறி, முட்டை, உலர் திராட்சை, பிஸ்கெட் இதை மட்டுமே சாப்பிட்டு வந்தேன். எனவே ‘சிக்ஸ் பேக்’ முயற்சி வேண்டாம்” என்று குறிப்பிட்டார்.




## இதை சாப்பிட்டால், புற்றுநோயை விலை கொடுத்து வாங்குவது என்று அர்த்தம்..!



நம் நாட்டில் மிகவும் பிரபலமான சிற்றுண்டிகளில் ஒன்று சோளக் கதிர்கள். நெருப்பில் வறுத்த சோளக் கதிர்கள் அல்லது வேகவைத்த சோளக் கதிர்கள் பெரும்பாலும் சாலையோரங்களில் காணப்படுகின்றன. பலர் அவற்றின் சுவைக்காக வறுத்த சோளக் கதிர்களை விரும்புகிறார்கள். ஏனெனில், வேகவைக்கும்போது, தானியங்களில் தண்ணீர் சென்று அவற்றின் இனிப்பு குறைந்து அவை மென்மையாக மாறும். நெருப்பில் வறுத்தெடுக்கும்போது, தானியங்களில் உள்ள நீர் குறைந்து, அவை மென்மையாகி, வெப்பத்தால் மென்மையாகி, அவற்றுக்கு ஒரு தனித்துவமான இனிப்பு சுவையைத் தருகின்றன. அதனால்தான் வறுத்த சோளக் கதிர்கள் மிகவும் கவர்ச்சிகரமானதாகத் தெரிகிறது.

சோளம் ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை ஒரு நல்ல உணவு. நீங்கள் பயணம் செய்யும் போது அல்லது வெளியில் சாப்பிட விரும்பாதபோது, உப்பு இல்லாமல் வேகவைத்த அல்லது உப்பு இல்லாமல் வறுத்த சோளக் கதிர்களை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். உப்பு இல்லாமல் வேகவைத்த சோளக் கதிர்களுக்கு முன்னுரிமை அளிக்க சுகாதார நிபுணர்கள் பொதுவாக பரிந்துரைக்கின்றனர். இருப்பினும், வறுத்த சோளக் கதிர்களை சாப்பிடுவதால் சில உடல்நல அபாயங்கள் இருப்பதாக அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சீனாவில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு, 405 குழந்தைகளுக்கு 16 நாட்களுக்கு வறுத்த சோளக்கதிர்களை உணவாகக் கொடுப்பதன் மூலம் பற்களில் ஏற்படும் விளைவுகளை ஆய்வு செய்தது. ஆய்வின்படி, வறுத்த சோளக்கதிர் ஃவுளூரோசிஸை ஏற்படுத்தும், இது பல் எனாமலை சேதப்படுத்தும். இது கரியில் வறுக்கப்படும் போது வெளியாகும் அதிக ஃப்ளோரின் உள்ளடக்கம் (வேகவைத்த வேர்க்கடலையை விட 35% அதிகம்) காரணமாகும்.

அதிகப்படியான ஃப்ளோரின் எலும்புகளையும் பலவீனப்படுத்துகிறது. இரண்டாவது குறைபாடு என்னவென்றால், வறுத்த வேர்க்கடலையின் கருமையான பகுதி ஃப்ரீ கார்பன்கள் மற்றும் ஹெட்டோரோசைக்ளிக் அமின்கள் எனப்படும் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களை உருவாக்குகிறது. இவை உட்கொள்ளும்போது, LDL (கெட்ட கொழுப்பு) மற்றும் VLDL அளவை அதிகரிக்கின்றன. மேலும், இந்த இரசாயனங்கள் புற்றுநோய் காரணிகளாக செயல்படுகின்றன.

அவை ஆரோக்கியமான செல்களைக் கூட புற்றுநோய் செல்களாக மாற்றும் திறனைக் கொண்டுள்ளன. கொழுப்பு செல்கள் ஆக்சிஜனேற்றம் அடைவதாலும், அதிகப்படியான ஃப்ரீ ரேடிக்கல்களை வெளியிடுவதாலும் புற்றுநோயின் அபாயமும் அதிகரிக்கிறது. எனவே, அதிகமாக வறுத்த வேர்க்கடலையை சாப்பிடுவது நீண்ட காலத்திற்கு புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கிறது. மூன்றாவதாக, கறைபடிந்த உணவின் கருப்பு பாகங்கள் இரைப்பை எரிச்சலை ஏற்படுத்தும். அவை உணவுக்குழாய் மற்றும் வயிற்றை எரிச்சலடையச் செய்து, உள் புறணியை சேதப்படுத்தும். இது இரைப்பை பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். இந்த அபாயங்களை மனதில் கொண்டு, நிபுணர்கள் சில பரிந்துரைகளை வழங்குகிறார்கள்.

முடிந்தவரை, உப்பு இல்லாமல் வேகவைத்த சோளக் கதிர்களை சாப்பிடுவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். நீங்கள் எப்போதாவது வறுத்த சோளக் கதிர்களை சாப்பிட விரும்பினால், அவற்றை உலர்த்தாமல் வறுக்கவும். குறிப்பாக, கோப் இலைகளை முழுவதுமாக அகற்றாமல் 2–3 அடுக்குகளாக வறுத்தெடுப்பதன் மூலம், சோளம் உலராமல் சமைக்கப்படுகின்றன. இதைச் செய்வது, தானியங்களுக்குள் நுழையும் ஃப்ளோரின், ஹெட்டோரோசைக்ளிக் அமின்கள் மற்றும் இலவச கார்பன்களின் அபாயத்தைக் குறைக்கிறது. சுவையை அனுபவிக்கும் போது உடல்நல அபாயங்களைத் தவிர்க்க இது ஒரு நல்ல தீர்வாகும். நன்கு உலர்ந்த உணவை சாப்பிடுவது எதிர்காலத்தில் புற்றுநோய்க்கு வழிவகுக்கும் ஆபத்தான பழக்கமாக மாறும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

# சென்னைக்கு கச்சா எண்ணெய் கொண்டுவரும் 2 கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியில் தவிப்பு: பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு வருமா?



சென்னை, மார்ச். 05–

ஈரான் – இஸ்ரேல் இடையே கடந்த 5 நாட்களுக்கு மேலாக போர் நடைபெற்று வருகிறது. இஸ்ரேலுடன் கைகோர்த்து அமெரிக்காவும் ஈரான் மீது குண்டு மழை பொழிகிறது. ஈரானும் பதில் தாக்குதல் நடத்தி வருவதால், போர் தீவிரம் அடைந்துள்ளது.

இதற்கிடையே, ஈரான் கட்டுப்பாட்டில் உள்ள ஹார்முஸ் ஜலசந்தியை அந்நாட்டு அரசு திடீரென மூடிவிட்டது. இந்த ஜலசந்தி வழியாகத்தான் ஆசியாவில் உள்ள பெரும்பாலான நாடுகளுக்கு கப்பல்கள் மூலம் கச்சா எண்ணெய் எடுத்துச் செல்லப்படுகிறது.

**700–க்கும் மேற்பட்ட கப்பல்கள் அணிவகுப்பு**

தற்போது, இந்த நீர் வழித்தடம் மூடப்பட்டு உள்ளதால், ஆசிய நாடுகளுக்கு வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய், கப்பல்கள் மூலம் எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க, 700–க்கும் மேற்பட்ட கப்பல்கள் கடலில் அணிவகுத்து நிற்கின்றன. கடலுக்கு உள்ளேயே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதில், சென்னை துறைமுகத்துக்கு கச்சா எண்ணெய் ஏற்றிவரும் 2 பிரமாண்ட கப்பல்களும் அடங்கும்.

**பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படுமா?**

மேலும், இந்தியாவுக்கு சொந்தமான 59 கப்பல்கள் அங்கு காத்திருப்பதாகவும், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாலுமிகள், சிப்பந்திகள் 700 கப்பல்களில் சிக்கித் தவிப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால், இந்தியாவுக்கான கச்சா எண்ணெய் வரத்து குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் உருவாகியுள்ளது.

**ரஷியா அனுப்ப தயார்**

அதே நேரத்தில், இந்தியாவின் நட்பு நாடான ரஷியா 95 லட்சம் எண்ணிக்கையில் கச்சா எண்ணெய் பீப்பாயை இந்தியாவுக்கு அனுப்ப தயார் நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளது.

இதனால், தமிழ்நாடு உள்பட இந்தியாவில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படாது என்று கூறப்படுகிறது.

**கன்டெய்னர் சேவை நிறுத்தம்**

அதே நேரத்தில், இந்தியாவில் உள்ள 12 துறைமுகங்களில் இருந்து மேற்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி வசதியும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, சென்னை துறைமுகத்தில் இருந்து கன்டெய்னர் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், இங்கிருந்து ஆடைகள், உணவு தானியங்கள், பதப்படுத்தப்பட்ட பொருட்கள், மருந்துகள், உதிரி பொருட்கள், இதர கருவிகள் உள்ளிட்டவை கொண்டு செல்வது தற்காலிகமாக தடைபட்டுள்ளது.

# தமிழ்நாட்டின் 6 மாநிலங்களவை உறுப்பினர்கள் யார்யார்?



சென்னை, மார்ச். 05–

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை இடங்களுக்கு போட்டியிடுபவர்களின் முழுப் பட்டியல் வெளியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 இடங்களில் எம்.எல்.ஏ.க்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் 4 இடங்கள் திமுகவுக்கும் 2 இடங்கள் அதிமுகவுக்கும் கிடைக்கும். திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு ஒரு மாநிலங்களவை இடமும், காங்கிரஸுக்கு ஒரு மாநிலங்களவை இடமும் ஒதுக்கப்பட்டது. அதிமுக தரப்பில் பாமகவுகு ஒரு இடம் ஒதுக்கப்பட்டது.

இந்த நிலையில், அந்தந்தக் கட்சிகள் தங்களின் வேட்பாளர்களின் பெயர்களை அறிவித்துள்ளனர்.

திமுகவின் திருச்சி சிவா, பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், அதிமுக தம்பிதுரை, காங்கிரஸ் கிறிஸ்டோபர் திலக், பாமக அன்புமணி, தேமுதிக எல்.கே. சுதீஷ் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

தம்பிதுரை 5 முறை மக்களவை உறுப்பினராகவும், அதில், இருமுறை மக்களவை துணைத் தலைவராகவும், மத்திய அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். 2019 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸின் ஜோதி மணியிடம் தோல்வியடைந்த நிலையில், 2020–ல் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# தமிழகத்தில் ‘ஜன் தன்’ வங்கி கணக்கு தொடங்கியவர்கள் எத்தனை பேர்..?




சென்னை, மார்ச். 05–

நாட்டில் உள்ள அனைத்து ஏழை, எளிய மக்களையும் வங்கி சேவை வரம்புக்குள் கொண்டுவர வேண்டும் என்ற உன்னத நோக்கத்திற்காக கடந்த 2014–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28–ந்தேதி பிரதமர் மோடி, பிரதமரின் ‘ஜன் தன் யோஜனா’ திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தின்படி ஒருவர் தனது பெயரில் அடிப்படை வங்கி சேமிப்பு வைப்பு கணக்கை, அதாவது குறைந்தபட்ச இருப்புத்தொகை இல்லாத சேமிப்பு வங்கி கணக்கை தொடங்கலாம். இதற்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்தது. நாடு முழுவதும் ‘ஜன் தன் யோஜனா’ திட்டத்தில் 57.71 கோடி பேர் வங்கிக்கணக்கை தொடங்கி உள்ளனர்.

அந்த வங்கி கணக்குகளில் ரூ.2 லட்சத்து 94 ஆயிரத்து 889 கோடி இருப்பு உள்ளது. இதன்மூலம் ‘ஜன் தன் யோஜனா’ வங்கி கணக்கின் சராசரி வைப்புத் தொகை ரூ.5 ஆயிரத்து 510 ஆக அதிகரித்துள்ளது.

இது 2022–ம் ஆண்டு ரூ.3 ஆயிரத்து 694 ஆகவும், 2023–ம் ஆண்டு ரூ.4 ஆயிரத்து 87 ஆகவும், 2024–ம் ஆண்டு ரூ.4 ஆயிரத்து 476 ஆகவும், 2025–ம் ஆண்டு ரூ.4 ஆயிரத்து 719 ஆகவும் இருந்தது. தமிழகத்தை பொறுத்தமட்டில் 1 கோடியே 86 லட்சத்து 35 ஆயிரத்து 977 பேர் ‘ஜன் தன் வங்கி கணக்கு தொடங்கியுள்ளனர். அந்த கணக்கு களில் ரூ.7 ஆயிரத்து 308 கோடி இருப்பு உள்ளது.

# 2030-ல் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு உயரும் - அரசு தகவல்!

சென்னை, மார்ச். 05–


தமிழ்நாடு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் 2021–ல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் தமிழ்நாட்டை 2030 க்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக உயர்த்திட இலக்கை நிர்ணயித்தார். அதன்படி, தமிழ்நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்கிட வேண்டும் என்பதில் குன்றா ஆர்வம் கொண்டு தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை, தூத்துக்குடி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களிலும், மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், அரபு நாடுகள், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய வெளிநாடுகளிலும் அரசு முறைப் பயணங்கள் மேற்கொண்டு முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தி தமிழ்நாட்டில் உள்ள தொழில் வாய்ப்புகளையும், தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகளையும் எடுத்துக்கூறி தமிழ்நாட்டிற்கு வந்து தொழில் தொடங்குமாறு முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார்.



இந்த வேண்டுகோளை ஏற்று தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட பல முதலீட்டாளர்கள் முன்வந்தனர். அந்த முதலீட்டாளர்களுக்கு நிலம் வழங்கிட ஐந்தாண்டுகளில் 30 புதிய தொழில் பூங்காக்களைத் தொடங்கினார்கள். 1973 முதல் செயல்பட்டு வரும் சிப்காட் தொழில் பூங்காக்களில் நடைபெறும் தொழில்களை விரிவுபடுத்திடவும், புதிய தொழில் பூங்காக்களில் புத்தம்புதிய தொழிற்சாலைகள் பலவற்றை உருவாக்கிடவும் இதுவரை 5 ஆண்டுகளில் 816 புதிய தொழில் நிறுவனங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

# வேலை வாய்ப்பு

## மத்திய ஆயுத போலீஸ் படை (ஏசிஎஸ்) தேர்வு, 2026 349 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்

அறிவிப்பு எண்: 08/2026–CAPF

வேலை வகை: மத்திய அரசு வேலைகள்

வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை

தேர்வு பெயர்: மத்திய ஆயுதப்படை போலீஸ் படைகள் (ஏசிஎஸ்) தேர்வு, 2026

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 349 உதவி கமாண்டன்ட்கள் (குரூப் ஏ) பதவிகள்

பணியிட இடம்: இந்தியா முழுவதும்

தொடக்க தேதி: 20.02.2026

கடைசி தேதி: 12.03.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://upsc.gov.in/



பழனி நெய்க்காரப்பட்டியில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடையை சட்டமன்ற உறுப்பினர் ஐ பி செந்தில்குமார் திறந்து வைத்தார்.

## தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# ரூ.8.50 கோடியில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மாவட்ட ஆட்சியர் ரஞ்சித்சிங் குத்து விளக்கு ஏற்றி பார்வையிட்டார்!



ஆண்டிபட்டி, மார்ச். 05–

தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள நவீன 1.5 டெஸ்லா எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியினை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

சென்னை தலைமை செயலகத்திலிருந்து நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் இச்சேவையை முதல்வர் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி புதிய ஸ்கேன் கருவியின் செயல்பாடுகளைப் பார்வையிட்டார்.

புதிதாக நிறுவப்பட்டுள்ள இந்த 1.5 டெஸ்லா எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மூலம் வழக்கமான பரிசோதனைகளுடன், இதயம் தொடர்பான எம்.ஆர்.ஐ., எம்.ஆர்.ஆஞ்சியோகிராபி, நரம்பியல் பாதிப்புகள் மற்றும் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் உயர்தரப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். குறிப்பாக, கதிர்வீச்சு பாதிப்பு இல்லாத பாதுகாப்பான முறையில் விபத்து மற்றும் அவசர கால நோயாளிகளுக்கு தாமதமின்றி சிகிச்சை அளிக்க இது வழிவகை செய்யும். மேலும் பக்கவாத நோய் கண்டறியபட்டு முழுவதுமான சிகிச்சை அளிக்க முடியும்.

மேலும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மேம்பட்ட பயிற்சிகளைப் பெறவும், ஆராய்ச்சித் திறனை வளர்த்துக்கொள்ளவும் இக்கருவி பெரும் உதவியாக இருக்கும், இதன் மூலம் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒரு முழுமையான மூன்றாம் நிலை சிகிச்சை மையமாக வலுப்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் மருத்துவக்கல்லூரி முதல்வர் முத்துசித்ரா, துணை முதல்வர் கவிதா, மருத்துவ கண்காணிப்பாளர் விஜய் ஆனந்த், உறைவிட மருத்துவ அலுவலர் சிவக்குமரன் மற்றும் அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நேர்காணல்!





ஒட்டன்சத்திரம், மார்ச். 05–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தாராபுரம் சாலையில் உள்ள தனியார் திருமண மஹாலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் ஆகியவற்றிற்கு புதிதாக பொறுப்புகளுக்கு விண்ணப்பித்த நிர்வாகிகளுக்கு நேர் காணல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஒட்டன்சத்திரம் சட்ட மன்ற தொகுதி மாவட்ட செயலாளர் கணபதி தலைமை வகித்தார். இதில் திண்டுக்கல் மண்டல மாவட்ட செயலாளர் பேராசிரியர் வி.ஜான்சன் கிறிஸ்டோபர் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் மண்டல துணைச் செயலாளர் ஜலால் முகமது, மண்டல துணைச் செயலாளர் வழக்கறிஞர் குமாரசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் 80–க்கும் மேற்பட்ட பாறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# ராசிபுரம்:128 குடும்பங்களுக்கு ரூ. 1.21 கோடி மதிப்பீட்டில் வீட்டுமனை பட்டா வழங்கிய எம்.பி.!



ராசிபுரம், மார்ச். 05–

ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் இதுவரை 40 ஆயிரம் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு இதுவரை எந்த ஆட்சியும் செய்யாத சாதனையாக நாளைக்கு இன்னொரு பகுதியில் விவசாய பட்டாக்கள் 972 வழங்கப்பட்டுள்ளது இதன் மதிப்பு சுமார் 60 கோடியை என பேசினார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முள்ளுக்குறிச்சி பகுதியில் உள்ள கார்கூடல்பட்டி பகுதிகளில் வசிக்கும் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த வீட்டுமனை பட்டாவை மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் இன்று வழங்கினார் .

நிகழ்ச்சியில் பங்கேற்று பட்டாவை வழங்கிய பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர். என் இராஜேஷ்குமார் திமுக ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகு ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் வீட்டுமனை பட்டா கேட்டு விண்ணப்பித்த மலைவாழ் மக்கள், பழங்குடியினர் மற்றும் ஏழைகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார் .

இன்று ராசிபுரம் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் 128 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வானது சுமார் 1.21 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பட்டா பெற வந்த முதியவர் கண்ணீருடன் பட்டாவை பெற்றுக்கொண்டு மாநிலங்களவை உறுப்பினர் கே ஆர் என். இராஜேஷ்குமார் காலில் விழுந்து நன்றி தெரிவித்தார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, தரமணி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று படப்பிடிப்புத் தளங்கள் கொண்ட திரைப்பட படைப்பாக்க வளாகத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஒளவை அருள், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மார்ச் 11-ந்தேதி திருச்சியில் என்டிஏ பொதுக்கூட்டம்! பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்பு...!

திருச்சி, மார்ச். 05–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலையொட்டி, வருகிற 11–ந்தேதி திருச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அந்த வகையில் வருகிற 11–ந்தேதி திருச்சியில் நடைபெறும் பிரமாண்ட பிரசார பொதுக்கூட்டத்தில் அவர் பங்கேற்று பேச இருக்கிறார். முன்னதாக பிரதமர் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டத்திற்கான இடம் தேர்வு கடந்த சில நாட்களாக நடந்தன.




அதன்படி திருச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் பஞ்சப்பூர் அருகே உள்ள திடலில் நடைபெறுகிறது. இதற்கான முகூர்த்தக்கால் நடும் நிகழ்ச்சி மாநில பொதுச்செயலாளர் கருப்பு முருகானந்தம் தலைமையில் நடைபெற்றது.

திருச்சியில் நடைபெறும் இந்த பிரமாண்ட கூட்டத்தில் மத்திய மந்திரி அமித்ஷாவும் பங்கேற்க இருப்பதாகவும், அதற்குள் கூட்டணியை இறுதி செய்யவும் தேசிய ஜனநாயக கூட்டணி முடிவு செய்துள்ளது.இதில், பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்பட கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்கின்றனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் தமிழ்நாடு நீடிக்கக்கூடிய கடல் வளங்கள் மற்றும் நீலப் பொருளாதார திட்டத்தின் கீழ் பிச்சாவரத்தில் 26.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் அலையாத்தி பாதுகாப்பு மையம், தமிழ்நாடு கடல் வளங்கள் மற்றும் நீலப் பொருளாதாரம் (TN–SHORE) திட்டத்தின் கீழ் மாக்காணத்தில் 50.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச பறவைகள் மையம், 'நீலகிரி வரையாடு திட்டத்தின்' கீழ் கோயம்புத்தூர் மாவட்டம், காந்திபுரத்தில் நீலகிரி வரையாடு பாதுகாப்பு மையம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தமிழ்நாடு கடல் வளங்கள் மற்றும் நீலப் பொருளாதாரம் (TN–SHORE) திட்டத்தின் தலைமை இயக்குநர் தீபக் எஸ். பில்கி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கத்தார் வாழ் இந்தியர்களே கவனம்!! எச்சரிக்கை!!

கத்தார், மார்ச். 05–

ஈரான் – அமெரிக்கா, இஸ்ரேல் மோதல் ஒவ்வொரு நாளும் தீவிரமடைந்து வருகிறது.

இந்த சூழலில் கத்தாரில் வசிக்கக்கூடிய இந்திய நாட்டவர்களுக்கு இந்திய தூதரகம் மிக முக்கியமான ஒரு எச்சரிக்கையை வெளியிட்டு இருக்கிறது. தோஹாவில் இருக்கக்கூடிய இந்திய தூதரகம் இது தொடர்பாக வெளியிட்டு இருக்கக்கூடிய அறிவிப்பில், தற்போதுள்ள சூழலை கருத்தில் கொண்டு கத்தார் நாட்டு உள்துறை அமைச்சகம் சில பாதுகாப்பு வழிமுறைகளை வெளியிட்டு இருக்கிறது. எனவே கத்தாரில் வசிக்கக்கூடிய இந்தியர்கள் இந்த பாதுகாப்பு வழிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியர்கள் வீட்டிற்குள்ளேயே இருக்க வேண்டும் என்றும் தேவை இல்லாமல் வீட்டை விட்டு வெளியேறு



வதை தவிர்க்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. வேறு வழியே இல்லை வெளியே சென்று ஆக வேண்டும் என்ற காரணம் இருந்தால் மட்டும் வீட்டை விட்டு வெளியே வாருங்கள் மற்றபடி வீட்டுக்குள்ளே இருங்கள் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல வீட்டிலேயே பால்கனி, ஜன்னல் போன்ற திறந்த பகுதிகளில் இருக்க வேண்டாம் என குறிப்பிட்டுள்ளது. அதிகாரப்பூர்வமான சமூகவலைதள பக்கங்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து வரக்கூடிய தகவல்களை மட்டுமே நம்புங்கள் என அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முன்னதாக கத்தார் நாட்டு உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தாக்குதல் நடத்தக்கூடிய பகுதிகளில் மக்கள் ஒன்று கூட கூடாது , அங்கே புகைப்படங்கள் வீடியோக்கள் எடுப்பதை தவிர்க்க வேண்டும் மேலும் அவற்றை பகிர்வதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்து இருக்கிறது. இதனை மீறக்கூடிய நபர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளது.



மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் மதுரை மாவட்டம் ஹோட்டல் தமிழ்நாட்டில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு, மதுரை மண்டலம் (கரூர், திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்கள்) சார்ந்த வாக்காளர் பதிவு அலுவலர்கள்,உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் உள்ளிட்ட தேர்தல் அலுவலர்களுக்காக நடைபெறும் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

# மலைப்பகுதிகளில் வீடு கட்டப் போறீங்களா? தமிழக அரசின் விதிமுறைகள்!

சென்னை, மார்ச். 05–




தமிழகத்தில் மலைப்பகுதிகள் பாதுகாப்பு குழுமத்தின் (HACA) கீழ் உள்ள பகுதிகளில் நில மேம்பாடு மற்றும் கட்டுமான அனுமதிகளை எளிதாக்கும் வகையில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை வரலாற்றுச் சிறப்புமிக்க அரசாணையை வெளியிட்டுள்ளது. 16 மாவட்டங்களில் உள்ள 597 வருவாய் கிராமங்களில் வசிப்போர், நிலம் மற்றும் வீடு தொடர்பான அனுமதிகளைப் பெற இனி பல அரசு அலுவலகங்களுக்கு அலைந்து திரிய வேண்டியதில்லை.

**எங்கு விண்ணப்பிக்க வேண்டும்? எப்படிப் பெறுவது?**

பொதுமக்கள் நிலப் பயன்பாட்டு மாற்றம் (Change of Land Use), லே–அவுட் அங்கீகாரம் அல்லது கட்டிட அனுமதி என எதற்கும் இனி நேரடியாக அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை. இதற்கான அனைத்து விண்ணப்பங்களையும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் (DTCP) அதிகாரப்பூர்வ இணையதளம் வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாணையின்படி, நீங்கள் விண்ணப்பிக்கும் போதே உங்கள் நிலம் தொடர்பான வருவாய் விவரங்களை அதிகாரிகளே அரசு ஆன்லைன் தரவுத்தளங்கள் மூலம் சரிபார்த்துக் கொள்வார்கள். இதனால் பொதுமக்கள் தனியாக வருவாய் கோட்டாட்சியரிடம் (RDO) தடையில்லாச் சான்று (NOC) பெற வேண்டிய கட்டாயம் நீக்கப்பட்டுள்ளது.

**மலைப்பிரதேசங்களுக்கான விரிவான விதிமுறைகள்:**

நிலப் பயன்பாட்டு மாற்றம்: நகர்ப்புறங்களில் 2 ஹெக்டேர் மற்றும் கிராமப்புறங்களில் 4 ஹெக்டேர் வரையிலான நில மாற்ற விண்ணப்பங்கள், சாதாரணப் பகுதிகளுக்குப் பின்பற்றப்படும் எளிய நடைமுறைப்படியே கையாளப்படும். இந்த அளவைத் தாண்டினால் மட்டுமே விண்ணப்பம் ஹாகா (HACA) குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்படும். இதற்கு வனத்துறை மற்றும் புவியியல்–சுரங்கத் துறையின் NOC அவசியம்.

லே–அவுட்கள்: லே–அவுட் விண்ணப்பங்களை ஹாகா குழுவின் முன் அனுமதிக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. வனத்துறை மற்றும் புவியியல் துறையிடம் ஒருமுறை NOC பெற்றிருந்தால் போதுமானது.

கட்டிட அனுமதி: ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட லே–அவுட்டில் நீங்கள் வீடு கட்டினால், வனத்துறை மற்றும் புவியியல் துறையிடம் மீண்டும் NOC பெறத் தேவையில்லை. ஒருமுறை நில மாற்றத்தின் போதோ அல்லது லே–அவுட்டின் போதோ NOC பெற்றிருந்தால், கட்டுமானத்தின் போது அதை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

**மலைப்பகுதி அல்லாத பிற ஹாகா இடங்கள்:**

இந்த இடங்களில் நிலம் வைத்திருப்பவர்களுக்கு இன்னும் கூடுதலான சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன:

1. புவியியல் துறை அனுமதி ரத்து: இப்பகுதிகளில் நில மாற்றமோ அல்லது கட்டிட அனுமதியோ பெற புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் (Geology & Mines) NOC தேவையே இல்லை.

2. கட்டிட அனுமதி தளர்வு: அங்கீகரிக்கப்பட்ட லே–அவுட்களில் அமையும் கட்டிடங்களுக்கு வனத்துறை மற்றும் புவியியல் துறை என எவரிடமும் NOC பெற வேண்டிய அவசியமில்லை.

3. வேளாண் பொறியியல் துறை விலக்கு: நிலத்தின் தன்மை புவியியல் ரீதியாகச் சரிபார்க்கப்படுவதால், வேளாண் பொறியியல் துறையிடம் தனியாக அனுமதி பெறத் தேவையில்லை என்ற விலக்கு தொடர்கிறது.

**பொதுமக்கள் கவனிக்க வேண்டிய 5 முக்கிய தகவல்கள்:**

1. நில வகை சரிபார்ப்பு: முதலில் உங்கள் நிலம் அரசாணையில் உள்ள 597 கிராமங்களின் பட்டியலில் எங்கு வருகிறது, அதாவது மலைப்பிரதேசமா அல்லது மலைப்பகுதி அல்லாத ஹாகா பகுதியா என்பதை உறுதி செய்யுங்கள்.

2. ஆன்லைன் விண்ணப்பம்: உங்கள் ஆவணங்களை ஆன்லைனில் பதிவேற்றினால், சம்பந்தப்பட்ட துறைகளுடன் (வனத்துறை, புவியியல் துறை) DTCP அதிகாரிகளே ஒருங்கிணைந்து அனுமதியை உறுதி செய்வார்கள்.

3. கால தாமதம் தவிர்ப்பு: ஹாகா குழுவின் ஒட்டுமொத்த ஒப்புதலுக்குக் காத்திருக்காமல், மாவட்ட அளவிலேயே குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட நிலங்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

4. மீண்டும் NOC தேவையில்லை: நிலத்தை ஒரு பயன்பாட்டிலிருந்து மற்றொரு பயன்பாட்டிற்கு மாற்றும்போதே நீங்கள் NOC பெற்றிருந்தால், அதே நிலத்தில் வீடு கட்டும் போது மீண்டும் அந்தச் சான்றுகளைத் தேடி ஓட வேண்டியதில்லை.

5. மாஸ்டர் பிளான்: அனைத்து அனுமதிகளும் அந்தந்த பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட மாஸ்டர் பிளான் (Master Plan) விதிகளுக்கு உட்பட்டே வழங்கப்படும்.

இந்த அதிரடி மாற்றங்கள் மூலம் மலைப்பகுதிகளில் நில மேம்பாட்டாளர்கள் மற்றும் சாதாரண மக்களின் நீண்ட காலப் போராட்டத்திற்குத் தீர்வு கிடைத்துள்ளது. இந்த அரசாணையை உடனடியாகச் செயல்படுத்த நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கு (DTCP) அரசு உத்தரவிட்டுள்ளது.

# டாஸ்மாக் பணியாளர்களுக்கு ரூ.1000 சம்பள உயர்வு! தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச். 05–

டாஸ்மாக் பணியாளர்களுக்கு ரூ.1000 சம்பள உயர்வு வழங்கப்படுவதாக அறிவித்துள்ள தமிழ்நாடு அரசு, இந்த சம்பளம் உயர்வு ஏப்ரல் 1முதல் அமலுக்கு வரும் என குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தில் பணிபுரிபவர்களி ன் பல்வேறு கோரிக்கைகளை அனைத்து தொழிற்சங்க ங்களும் நிர்வாகத்திற்கு வைத்ததின் பேரில், அவர்களு டைய கோரிக்கைகளை பரிசிலனை செய்து கீழ்க்கண்டவாறு அறிவி ப்புகள் வெளியிடப்படுகிறது. அதன்படி டாஸ்மாக் கடை பணியாளர்கள் ஏற்கனவே பெறும் ஊதியத்தோடு தற்போது கூடுதலாக ரூ.1000




உயர்த்தி வழங்கப்படுகிறது.

இது, வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் அமலுக்கு வரும். இதன் மூலம் 24,033 கடை பணியாளர்கள் பயன்பெறுவார்கள். கடை பணியாளர்களுக்கு இஎஸ்ஐ மருத்துவ மற்றும் சமூகப்பாதுகாப்பு காப்பீட்டு திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காலிபாட்டில்களை திரும்ப பெறும் திட்டம் அவுட்சோர்சிங் முறையிலோ அல்லது காலிபாட்டில்களை சேகரிப்பு செய்யும் ஒப்பந்ததாரர்கள் மூலமாகவோ செயல்படுத்த விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். கிடங்கு பணியில் உள்ள பணியாளர்களுக்கு கலந்தாய்வு மூலம் கடைப்பணி ஒதுக்கீடு செய்யப்படும்.

தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு வெளியில் உள்ள கடை பணியாளர்களுக்கு குற்றச்சாட்டுகள் தன்மைக்கேற்ப மீண்டும் பணிவழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், பணியாளர்களின் அனைத்து கோரிக்கைகள் தொடர்பாக மேலாண்மை இயக்குநர் (டாஸ்மாக்), பொது மேலாளர் (சில்லறை விநியோகம்), பொது மேலாளர் (நிர்வாகம்), துணை பொது மேலாளர் மற்றும் சட்ட அலுவலர் (டாஸ்மாக்) ஆகியோர் ஆய்வு செய்து அறிக்கை துறைக்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# இனி ஐபிஎல் போட்டிகள் இந்த 14 மைதானங்களில் நடக்கும்...?

சென்னை, மார்ச். 05–

ஐபிஎல் தொடரை பொருத்தவரை, ஹோம் மைதானம் முக்கியமானவை. ஒரு அணி அதன் ஹோம் மைதானத்தில் தங்களுக்கு ஏற்ப ஆடுகளங்களை அமைத்துக்கொள்ளலாம். 7 போட்டிகள் ஹோம் மைதானத்தில் நடைபெறும். அதில் பெரும்பான்மையான போட்டிகளில் வெல்லும் அணிகளே பிளே ஆப் வாய்ப்பை பெறும். ஒரு சில அணிகளுக்கு இரண்டு ஹோம் மைதானங்கள் கூட இருக்கும்.

ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு: கர்நாடக தலைநகர் பெங்களூரு எம்.ஏ. சின்னசாமி மைதானம்; சத்தீஸ்கர் ராய்ப்பூரில் உள்ள ஷாஹீத் வீர் நாராயண் சிங் சர்வதேச கிரிக்கெட் மைதானம்.

பஞ்சாப் கிங்ஸ்: பஞ்சாபின் முலான்பூர் மஹாராஜ் யதவிந்திர சிங் பஞ்சாப் கிரிக்கெட் சங்கம் மைதானம்; ஹிமாச்சல் பிரதேசத்தின் தர்மசாலாவில் உள்ள HPCA மைதானம்.

மும்பை இந்தியன்ஸ்: மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் உள்ள வான்கடே மைதானம்.

குஜராத் டைட்டன்ஸ்: குஜராத்தின் அகமதாபாத் நகரில் நரேந்திர மோடி மைதானம்.

டெல்லி கேப்பிடல்ஸ்: டெல்லி அருண் ஜெட்லி மைதானம்; ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் உள்ள ACA–VDCA கிரிக்கெட் மைதானம்.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத்: தெலங்கானா தலைநகர் ஹைதராபாத் நகரில் உள்ள ராஜீவ் காந்தி கிரிக்கெட மைதானம்.

லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ்: உத்தர பிரதேச தலைநகர் லக்னோவில் உள்ள ஏகனா கிரிக்கெட் மைதானம்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ்: மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானம்.

ராஜஸ்தான் ராயல்ஸ்: ராஜஸ்தான் தலைநகர்




ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான்சிங் மைதானம்; அசாம் மாநிலம் கௌகாத்தியில் உள்ள பரஸ்பரா ஏசிஏ மைதானம்.

சென்னை சூப்பர் கிங்ஸ்: தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ. சேப்பாக்கம் மைதானம்.

**தேவை**

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020